KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.59

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

தொல்காப்பியம் கற்றலில் ‘அறக்கல்வியும் துறவுக்கல்வியும் வினையிற்படல்

The Engagement in ‘Virtue Education and Ascetic Education’ through Action in Tolkappiyam

முனைவர் சு. பால்பாண்டி[1,*iD]

[1] தமிழ்த்துறை, பன்முகக் கலை மற்றும் வணிகக் கல்விப் புலம் , எஸ்.ஆர்.எம். நிகர்நிலைப் பல்கலைக்கழகம் வடபழனி, சென்னை – 600026

***Corresponding author:** முனைவர் சு. பால்பாண்டி, palpands@srmist.edu.in

ORCID iD: முனைவர் சு. பால்பாண்டி https://orcid.org/0009-0004-9305-8646

ARTICLE INFO

Article history
Received: 6 November 2026
Revised: 6 November 2026
Accepted: 6 November 2026

Article ID
KIJTS-2026-0006

Peer review
Double-blind peer review

Keywords
Tolkappiyam
Aram
Turavu
Tinai Theory
Sangam Literature
Akam Life
Puram Life
Tamil Culture
Ethics in Education
Ancient Tamil History

ABSTRACT

This research paper explores the conceptualization of moral education (Aram) and ascetic education (Turavu) as reflected in Tolkappiyam, the foundational Tamil grammatical treatise, within the broader context of human history and cultural evolution. Human civilization transitioned from agricultural and nomadic pursuits to structured socio-cultural frameworks. In Tamil tradition, human life is synthesized into interior (Akam) and exterior (Puram) domains governed by the Tinai (landscape and ethical system) framework. Tolkappiyam highlights that while various roles facilitate interior life, righteous living (Aram) is primarily anchored by the core figures: the hero, heroine, companion, and foster mother. Furthermore, the text demonstrates how duty-bound engagement in education, wealth creation, and societal defense evolves into altruism and, ultimately, mental preparedness for renunciation (Turavu). The study underscores Tolkappiyam as a vital historical and philosophical document illustrating the ethical and ascetic maturity of Tamil society.

How to cite this article: முனைவர் சு. பால்பாண்டி (2026). தொல்காப்பியம் கற்றலில் ‘அறக்கல்வியும் துறவுக்கல்வியும் வினையிற்படல். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 677. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.59
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

சமூகத் தொழில்கள் பண்பாட்டு வளர்ச்சிப் பாதையில் முன்னேற்ற மானுட வாழ்வும் இயல்புச் சூழலாக விரிவடைந்து வருகின்றன. தொழில் கல்விகள் இயல்பின்

வழிப்படுத்தலில் மானுடம் தன்தேவை கருதி உணவு வேளாண்மைத் தொழிலில் நிலைகொண்டிருந்தன. தொழில் பயணமானது நாடோடி குழுக்கள், கடல்வழி குழுக்கள் என பிரிவினை மேற்கொண்டிருத்தல் கூடும். மனித நடைப்பயணத்தை எத்தியோப்பியா, மத்திய ஆப்ரிக்கா மற்றும் அயிரோப்பிய நாடுகளிலிருந்து தொடங்கியதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மொழி சார்ந்த மானிட வாழ்வில் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு நெறியில் வாழ்ந்த மக்கள் முதலில் பொருள்வினை மேற்கொண்டு சிறந்து விளங்கியமையுண்டு. கடல்கோள் நிலைகொண்ட தமிழ்ச் சமூக நிலங்களில் பல்வேறு வாழ்வியல் நூல்கள் பெருகி மறைவு எய்தாத மிஞ்சிய நூல்களில் சங்க நூல்களும் உண்டு என்பதில் மிகையன்று. இலக்கியம் , இலக்கணம், காப்பியம், நாடகம், கடிதம் என்கின்ற தகவல் பெட்டகத்தின் சொற்கோர்வையாக மானுட வரலாற்றுச் சான்றுகள் பல்வேறு பிரிவுகளில் பொதிந்திருப்பதை ஆய்வறிஞர்களால் புறவுலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டும் சான்றுரைக்கப்படுகிறது.

தமிழர் வரலாற்றுப் பட்டியலில் தொல்காப்பிய(இலக்கண)ம் முதன்மை சான்றாக வலியுறுத்தப்படுதலில் திணைக்கோட்பாட்டு முறைமைகள் வலிமையுடைதெனில் நிலத்தின் அளவியலும் முறைமைப்படுகிறது. உலகத்தோற்ற அமைப்புகளில் நிலயளவைகள் எங்கும் பதியப்படாத வரலாற்று அளவையாக தமிழர் இலக்கிய வாழ்வும் நெறிக்கோட்பாட்டு இலக்கணமும் மானுடச் சமூகத்தின் வாழ்வியளவியலாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன என்பது மிகையல்ல.

மானுட அறிவுலகின் செலவு மேற்கொள்ளலில் தமிழ்ச் சமூகம் கல்வி(ஓதல்), பொருள்(உணவுப் பொருள்), போர்(நாடு காத்தல்) எனப் பல்வேறு பிரிவுகளில் சிறப்புற்றிருந்தனர். தமிழர் களவு, கற்பு என்று அகவாழ்வில் முழுதுடன் தன்னை ஈடுபடுத்த சிறந்த அறிவுலகின் வினைப் பயன்பாட்டினைக் கற்றுக்கொண்டதில் பெருமிதமுண்டு. அகவாழ்வின் வாயில் நெறியினராக தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாணன், பாடினி மற்றும் வழியினோர் என அறநெறியை கைக்கொள்வர். ஆனால் அறத்தின் நிற்றலுக்கு முதல் நால்வர் மட்டும் தகுதியுடையோராக ஏற்றிக் குறிப்பிடுவர் தொல்காப்பியர்.

தமிழர் வாழ்வியலை அறக்கோட்பாட்டு நெறிமுறைகளில் பட்டியலிடும் சங்க இலக்கியம் திணை, துறை, இறைச்சி வாயிலாக அறச்சான்றோரை பகுத்துக்காட்டுகிறது பொருள் தேடுதல், பொருள் விற்றல், நாடு காத்தல் என்று வினை மேற்படல் புற வாழ்வின் நெறியளவியலை தலைவன் அறச்செயலாக மேற்கொள்ளுதலுண்டு.

அறத்தின் வழிநின்று வாழ்வின் முறையளவை அறிந்த தலைவன், தலைவி கண்டோர்க்கு பொருள் நல்கும் அளவு முறையினால் இன்பம் எய்தும் வாழ்வியல் கடந்த துறவு வினைப்படலும் உண்டு. துறவுவினை கொண்ட தவச் சான்றோராக

தலைவனும் தலைவியும் துறவளவியலை மனத்தீண்டலுண்டு என்பதனை தொல்காப்பியம் கற்றளவியலை வலியுறுத்துகின்றன.

தொல்காப்பியம் கற்றலில் 'அறக்கல்வியும் துறவுக்கல்வியும் வினையிற்படல்'

முன்னுரை

கற்றல் பயனில் மானுடம் விவரிக்கும் தொழில்களின் செயற்பாடானது குழுச் சமூகத்தின் வாழ்வியலை உயிராக்கத்தின் தொடக்கநிலை சூழலாக குறிப்பிடத்தக்கவை. மானுட வாழ்க்கையில் உயிரை பேணிக் காத்தல் குழுப்பணியாக தொழிற்பட்டவை. குழுச் சார்ந்து பயன்பாட்டறிவிலும் , குழுச்சாரா பயன்பாட்டறிவிலும் மானுடத்தின் இருப்பியலை தொல்காப்பியம் கற்பதனால் ஏற்படும் கல்வியின் வகைச் செயல்பாடுகள் குறித்த ஆய்வு முதன்மைப்படுகிறது.

திறவுச் சொற்கள்

தொல்காப்பியம் - பொருள் – செலவு – மானுடம் – தொழில் – குழு – சூழல் – தலைவன் – தலைவி – தோழி – செவிலி – நற்றாய் – பாணன் - பாடினி மற்றும் வழியினோர்.

ஆய்வின் நோக்கம்

காலயுருள் அச்சாணி போல் இரு துருவங்களின் வழிநடத்தல் சமப்பொருளாக கல்விச் செல்வம் இயங்குகிறது. கற்றல் பொருளில் தொல்காப்பியர் தன் படைப்பாக்கத்தில் வாக்கியமைப்பின் தொடக்களவில் எழுத்து, சொல் முறையளவை கூறியிருப்பினும் மானுட வாழ்வில் இருப்பியலை எடுத்து விளக்குகிறார். மானுடச் சமூக இருப்பின் வெளிப்பாட்டில் அகம் புறம் சார்ந்த வாழ்வில் 'பொருளிருப்பு' குறித்து ஆராய்வதே நடப்புகால நோக்கமாகிறது.

ஆய்வின் பயன்

சமூக வாழ்வின் நிலைப்புக் கோட்பாட்டு வெளிப்பாட்டில் அகம், புறம் பொருளின் வரையறையை தொழிற்படுத்தல் பயனில் வெளிப்படுகிறது. தொன்மைமிகு காலகட்டத்தில் திணை சார்ந்த வாழ்வில் சமூகக் குழுவின் நிலைப்புத் தன்மை காணப்படுவதால் அறிதலின் செயலும் வலிமையடைகிறது.

சமூகத் தொழில்கள் பண்பாட்டு வளர்ச்சிப் பாதையில் முன்னேற்ற மானுட வாழ்வும் இயல்புச் சூழலாக விரிவடைந்து வருகின்றன. தொழில் கல்விகள் இயல்பின் வழிப்படுத்தலில் மானுடம் தன்தேவை கருதி உணவு வேளாண்மைத் தொழிலில் நிலைகொண்டிருந்தன. தொழில் பயணமானது நாடோடி குழுக்கள், கடல்வழி குழுக்கள் என பிரிவினை மேற்கொண்டிருத்தல் கூடும். மனித நடைப்பயணத்தை எத்தியோப்பியா, மத்திய ஆப்ரிக்கா மற்றும் அயிரோப்பிய நாடுகளிலிருந்து தொடங்கியதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மொழி சார்ந்த மானிட வாழ்வில் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு நெறியில் வாழ்ந்த மக்கள் முதலில் பொருள்வினை மேற்கொண்டு சிறந்து விளங்கியமையுண்டு. கடல்கோள் நிலைகொண்ட தமிழ்ச் சமூக நிலங்களில் பல்வேறு வாழ்வியல் நூல்கள்

பெருகி மறைவு எய்தாத மிஞ்சிய நூல்களில் சங்க நூல்களும் உண்டு என்பதில் மிகையன்று. இலக்கியம் , இலக்கணம், காப்பியம், நாடகம், கடிதம் என்கின்ற தகவல் பெட்டகத்தின் சொற்கோர்வையாக மானுட வரலாற்றுச் சான்றுகள் பல்வேறு பிரிவுகளில் பொதிந்திருப்பதை ஆய்வறிஞர்களால் புறவுலகத்திற்கு அறிவுறுத்தப்பட்டும் சான்றுரைக்கப்படுகிறது.

தமிழர் வரலாற்றுப் பட்டியலில் தொல்காப்பிய(இலக்கண)ம் முதன்மை சான்றாக வலியுறுத்தப்படுதலில் திணைக்கோட்பாட்டு முறைமைகள் வலிமையுடைதெனில் நிலத்தின் அளவியலும் முறைமைப்படுகிறது. உலகத்தோற்ற அமைப்புகளில் நிலயளவைகள் எங்கும் பதியப்படாத வரலாற்று அளவையாக தமிழர் இலக்கிய வாழ்வும் நெறிக்கோட்பாட்டு இலக்கணமும் மானுடச் சமூகத்தின் வாழ்வியளவியலாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன என்பது மிகையல்ல.

மானுட அறிவுலகின் செலவு மேற்கொள்ளலில் தமிழ்ச் சமூகம் கல்வி(ஓதல்), பொருள்(உணவுப் பொருள்), போர்(நாடு காத்தல்) எனப் பல்வேறு பிரிவுகளில் சிறப்புற்றிருந்தனர். தமிழர் களவு, கற்பு என்று அகவாழ்வில் முழுதுடன் தன்னை ஈடுபடுத்த சிறந்த அறிவுலகின் வினைப் பயன்பாட்டினைக் கற்றுக்கொண்டதில் பெருமிதமுண்டு. அகவாழ்வின் வாயில் நெறியினராக தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாணன், பாடினி மற்றும் வழியினோர் என அறநெறியை கைக்கொள்வர். ஆனால் அறத்தின் நிற்றலுக்கு முதல் நால்வர் மட்டும் தகுதியுடையோராக ஏற்றிக் குறிப்பிடுவர் தொல்காப்பியர்.

தமிழர் வாழ்வியலை அறக்கோட்பாட்டு நெறிமுறைகளில் பட்டியலிடும் சங்க இலக்கியம் திணை, துறை, இறைச்சி வாயிலாக அறச்சான்றோரை பகுத்துக்காட்டுகிறது பொருள் தேடுதல், பொருள் விற்றல், நாடு காத்தல் என்று வினை மேற்படல் புற வாழ்வின் நெறியளவியலை தலைவன் அறச்செயலாக மேற்கொள்ளுதலுண்டு.

அறமாந்தர்

மானிட வாழ்வில் முதன்மை அறக்கோட்பாட்டு திணைப் பிரிவுகளில் தலைவன், தலைவி, நற்றாய், செவிலி, தோழி,பாணன், பாடினி, வழிப்போக்கர் என அறசெயற்பாட்டினராக இயக்க பெற்றமையை தொன்மை இலக்கியங்களான பாட்டும் தொகையும், இலக்கணங்களான தொல்காப்பியம், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை மாந்தர்களின் கோட்பாட்டு எடுத்துரைப்பியலாக சிறப்பிக்கப்படுகின்றன.

தொகையும் பாட்டும் , காப்பியம், சிற்றிலக்கியம், அறவிலக்கியம், பக்தியிலக்கியம் திணை வழியும் உரைநடை, கவிதை, புதினம், நாடகம் திணை பிறழ்ச்சியுடனும் அறம், துறவு வாழ்வியல் கற்பியலாக விளங்குகின்றன. முதன்மை தமிழ்மொழி படைப்பாளரான திருவள்ளுவர்,

‘கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக (குறள்.391)

‘இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த அய்ந்திணை மருங்கில்

காமக் கூட்டம் காணுங் காலை

மறைஓர் தேஎத்து மன்றல் எட்டனுள்

துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே. (தொல்.பொருள்.களவு-1)

திணை அன்பின் மூன்று நிலையும், பிறிதுஓர் வழி இன்பத்தின் கூட்டுவித்தல் முறைமைக்கு துறைபோகிய சான்றோரின் மொழிதலையும் கொள்தல்காண் தன்மையறிதலுண்டு.

‘வடவேங்கடந் தென்குமரி

ஆயிடைத்

தமிழ்கூறு நல்லுலகத்து

வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்

எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு

முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்

புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்’ (தொல். எழுத். சிற.பாயிரம்)

துறைபோகிய நூல்கண்டு தெளிதல். மக்களின் பழக்கவழக்கும் வாய்மொழிப் பாட்டின் மூவடிவமும் தெளிந்து அறிதலுண்டு

‘அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்

மறத்திற்கும் அஃதே துணை.’ (குறள்.76)

‘இவனிவ ளைம்பால் பற்றவும் இவளிவன்

புன் தலை ஓரி வாங்குநள் பரியவும்

காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிராது

ஏதில் சிறுசெரு உறுப மன்னோ

நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்

துணைமலர்ப் பிணையல் அன்னவிலர்

மணமகி ழியற்கை காட்டி யோயே’ (குறுந்.229)

நில வாழ்வில் மக்கள் ஒருவருக்கொருவர் சார்புற்ற அன்பானது மணமகிழ் அறமாக ஒருமித்தல் இயல்பேயாகும். கூடியிருந்து அன்பை வெளிப்படுத்தும் மக்களிடையே

பிரிவும் வெளிப்பட்டு சமநிலை போக்கு வலிமைப்படுகிறது. அன்பறத்திற்கு சாந்துணையாக,

‘வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணுந்
தானே கூறுங் காலமும் உளவே’

காலநிலை அறிதலில் மக்கள் தெளிவுற்று இருத்தலை எடுத்துரைக்கிறது.

‘என்னைகொல் தோழி யவர்கண்ணு நன்கில்லை
அன்னை முகனு மதுவாகும் – பொன்னலர்
புன்னையம் பூங்கானற் சேர்ப்பனைத் தக்கதோ
நின்னல்ல தில்லென் றுரை.’ (அய்ந்.எழு. 58)

மகிழ்நன் மார்பே வெய்யை யால்நீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே’ (குறுந்.73)

‘மெய்யில் தீரா மேவரு காமமொடு
எய்யா யாயினு முரைப்பல் தோழி
கொய்யா முன்னுங் குரல்வார்பு தினையே
அருவி யான்ற பைங்கால் தோறும்
இருவி தோன்றிய பலவே நீயே
முருகு முரண்கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்
பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலோ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடாலை நுடங்க எழுந்தெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
ஆங்காங் கொழுகா யாயி னன்னை
சிறுகிளி கடிதல் தேற்றா ளிவளெனப்
பிறர்த் தந்து நிறுக்குவ ளாயின்
உறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே’ (அகம்.28)

ஓர் உயிர் மனமான மக்கள் பிரிவின் காலம் எண்ணி வருந்துதலைவிட, கூடி இருத்தலின் வருகையில் (இடர்ப்பாடு) பிற உயிரினங்களால் தெளிவுறுத்தப்படுகிறது.

’இரவுக் குறியே இல்லகத் துள்ளும்

மனையோர் கிளவி கேட்குவழி யதுவே

மனையகம் புகாஅக் காலை யான’ (தொல்.கள.129)

மானுட வாழ்வில் கூடியிருத்தல் பாலுறவின் வெளிப்பாட்டில் புறம், அகம் இணையறிதல் வலியுறுத்துகிறது (அல்லகுறிப்பட்டதனை ஒருவாற்றான் உணர்த்திய காலத்து அவன் அதுகேட்டு ஆற்றுவனென்பது கருதி, ‘மனையோர் கிளவி கேட்கும் வழியது’ என்றார். ஏகாரம் ஈற்றசை: என்றது ,இரவுக்குறி. அம்முயற்சிக்காலத்து அச்சநிகழ்தலின் , அகமனைக்கும் புறமதிற்கும் நடுவே புணர்ச்சி நிகழுமென்றதாம் . அகமனையிற் புகாக்காலையெனவே , இரவுக்குறி அங்ஙனஞ் சிலநாள் நிகழ்ந்த பின்னர், அச்சமின்றி உண்(ள்)மனையிற் சென்று கூடவும்பெறு மென்பதுங் கூறியதாம்.’இரவுமனை யிகந்த’ என்னும் இறையனார் களவியற் உரை பொருள் முரண்படுதல் தன்மையன என்பர் நச்சினார்க்கினியர்.

‘கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே

புணர்ந்துடன் போகிய காலை யான’ (தொல்.கற்.141)

’பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு

தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய

நாலூர்க் கோசர் நன்மொழி போல

வாயா கின்றே தோழி ஆய்கழற்

செயலை வெள்வேல் விடலையொடு

தொகுவளை முன்கை மடந்தை நட்பே’ (குறுந்.15)

வாழ்க்கை முறையில் அறிவினோர் முன்னிலையின்றி இயற்சூழலில் கூடி மகிழ்தல் நடைபெறுகிறது.

‘புல்கென முன்னிய நிறையழி பொழுதின்

மெல்லென் சீறடி புல்லிய விரவினும்

உறலருங் குண்மையி னூடல் மிகுத்தோளைப்

பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்’ (தொல்.கற்.6)

மிகுகோபம் கொண்ட இணையரினஅடி வருடியப் பின்னும் தணியாதக் கோபத்தினை பிற மகளிர் வினைப்பாட்டினால் சமன்செய் ஏற்றலும் இயல்பினவே.

‘அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ்

செறிதோறுஞ் சேயிழை மாட்டு’ (குறள். 1110)

‘நேரிழாய் நீயும்நின் கேளும் புணர
வரையுறை தெய்வம் உவப்ப உவந்து
குரவை தழீஇயாம் ஆடக் குரவையுள்
கொண்டு நிலைபாடிக் காண்’ (கலி.39)

’திருந்துங் காட்சிப் பெரும்பெயர்க் கற்பின்
நாணுடை அரிவை மாண்நகர் நெடுந்தேர்
எய்த வந்தன்றாற் பாக நல்வரவு
இளையர் இசைத்தலின் கிளையோ ரெல்லாஞ்
சேயுயர் நெடுங்கடைத் துவன்றினர் எதிர்மார்
தாயரும் புதல்வருந் தம்முன் பறியாக்
கழிபே ருவகை வழிவழி சிறப்ப
அறம்புரி யொழுக்கங் காண்கம்

வருந்தின காண்கநின் திருந்துநடை மாவே’. என்பவே ஒழுக்க நெறிப்படல் உணர்த்துகிறது .

‘பிரியுங் காலை யெதிர் நின்று சாற்றிய
மரபுடை யெதிரு முளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி யெல்லாந்
தோழிக் குரிய வென்மனார் புலவர்’ (தொல்.கள.23)

மானுடச் சமூகத்தில் வழிப்படுத்தல் மரபின் இயல்பாக மக்களின் சார்புத் துணை ஏற்புடைத்தாகிறது.

துறந்த ஒழுக்கம்

தொழிலின்பால் செல்லும் மக்கள் அன்பு, அறம் ஒழுக்கத்தின் இகழ்தலினால் துறந்த வாழ்க்கையை மிகுபட செய்தல் வலிமையுடைத்து.

’அன்பே அறனே இன்பம் நாணொடு
துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்
ஒன்றும் வேண்டா காப்பி னுள்ளே.’ (தொல்.பொரு.25)

‘எல்வளை யெம்மோடு நீவரின் யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆயித ழரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறின் அவ்வடி கறுக்குந வல்லவோ’ (கலி.13)

பொருள் தேடும் சமூகத்தில் நீண்ட பயணம், அச்சம் தரும் நிலங்கள், நிலையிலா இருப்பிடங்கள் போல்வன ஒழுக்க நெறிமைகளில் மாறுபாடு அமைந்துவிடுகிறது.

’அறக்கழிவு உடையன பொருட்பயம் படவரின்

வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப.’ (தொல்.பொருள்)

இல்வாழ்வில் பொருள் பயன் தேடுதலில் தன் அற ஒழுக்கங்களில் நீக்கம் பெறுவது வழக்குடைமை பழியுடைத்தன்று.

’ஒருதலை உரிமை வேண்டியும் மகடூஉப்

பிரித லச்சம் உண்மை யானும்

அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று

அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்

நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்

போக்குள் வரைவும் மனைவிகண் தோன்றும்.’ (தொல்.கள.21)

பொருள் செய்யும் வேட்கையில் இல்லின் இருவர் தலைப்படுதல் உலக இயல்பின் பிரிவு வலியுறுத்தலில் சிற்சில இடையூறுகள் மனை மாண்பினாளுக்கு நிகழ்த்தமை ஏற்படுத்தல்.

’நீர்நீடு ஆடிற் கண்ணுஞ் சிவக்கும்

ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்குந்

தணந்தனை ஆயினெம் இல்லுய்த்துக் கொடுமோ

அந்தண் பொய்கை யெந்தை யெம்மூர்க்

அடும்பாம்பு வழங்குந் தெருவில்

நடுங்கஞர் எவ்வங் களைந்த வெம்மே.’ (குறுந்.354)

‘செய்பொருள் அச்சமும் வினைவயின் பிரிவும்

மெய்பெற வுணர்த்துங் கிழவிபா ராட்டே.’ (தொல்.கற்.149)

’செய்கப் பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்

எஃகதனிற் கூரிய தில்’ (குறள்.759)

மானுட வாழ்க்கையில் பொருள்வளம் அமைத்தல் சூழல் நிகழ்வினால் வினைகொள்பட சமூகவளம் மேல்நிலைப்பட்ட தன்மையன.

விளைவுரை

இயற்கை அறிவு தோற்றத்தின் வினையிற்பட்டு, மனித சமூகம் நிலைகொள்படாத வாழ்வில் இடப்பெயர்வு, காத்தல், நல்வளமை என்னும் சிந்தனையூக்கினையால் பாலின விழைவு, வினைவிழைவு எழுச்சி ,தமிழ்நில வரலாற்று இலக்கியப் பதிவுகளில் மூத்த அறிவுடையோர் தமிழாசான் தொல்காப்பியர் படைத்த தமிழ்

தொல்வாழ்விலக்கணக் கோட்பாட்டுத் தமிழ் மானுடச் சிந்தனையில் அறம்சார் கல்வியும் துறவுசார் கல்வியும் வலிமிகுந்து விழைவுறுகிறதை தொல்காப்பியம் விதந்தோதுகிறது.

பார்வை,

References

நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் பொருள், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் திருநெல்வேலி, சென்னை-1.

தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை.